அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்:107/2016*
*தேதி:17.06.2016*

# 16.06.2016 நடைபெற்ற மாநில நிர்வாகிகள், மாவட்ட, தொகுதிச் செயலாளர்கள் கூட்டத் தீர்மானங்கள் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் அனைத்து மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 16.06.2016 வியாழக்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மேல்மருவத்தூர் அருகில் அச்சரப்பாக்கத்தில் உள்ள SMJ மகாலில் தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மாநில நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கிட, அனைத்து மாவட்ட, தொகுதி நிர்வாகிகள் முன்னிலையில் கூட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில துணை பொதுச் செயலாளர்கள் திரு.என்.என்.சண்முகசுந்தரம், திரு.பன்னீர்செல்வம், கொள்கை பரப்புச் செயலாளர் திரு.என்.எம்.எஸ்.விவேகானந்தன், சென்னை மண்டல செயலாளர் திரு.எம்.ஏ.சேவியர், தென் மண்டலச் செயலாளர் திரு.என்.சுந்தர், மதுரை மண்டல செயலாளர் திரு.ஜி.ஈஸ்வரன், இளைஞரணி & மாணவரணிச் செயலாளர் திரு.சாமுவேல் மேத்யூ, வர்த்தகரணிச் செயலாளர் திரு.கே.ஜே.நாதன், வழக்கறிஞரணிச் செயலாளர் குமார், கலை இலக்கிய அணிச் செயலாளர் பிரான்சிஸ் அந்தோணிராஜ், மகளிரணிச் செயலாளர் திருமதி.எம்.பாகீரதி, புதுவை மாநிலச் செயலாளர் திரு.இ.கே.ராமச்சந்திரன், கலை இலக்கிய அணி துணைச் செயலாளர் திரு.சின்னத்திரை. எம்.இராஜேந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். அனைத்து மாவட்ட, தொகுதி செயலாளர்கள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.*

## *நிறைவேற்றப்பட்ட கூட்டத் தீர்மானங்கள்*

1. *6 வது முறையாக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.*

2. *தமிழக மக்களின் நலன் கருதி பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இக்கூட்டம் மனதார பாராட்டுகிறது.*

3. *நமது இயக்கத்தின் பொதுச் செயலாளராக தலைவரே கூடுதலாக பொறுப்பு வகித்து, இயக்கத்தை முன்னேற்றி செல்வார் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.*

4. *கட்சி வளர்ச்சி, எதிர்கால நலன் கருதி தலைவர் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் முழு ஒத்துழைப்பு நல்குவோம் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.*

5. *மாநில, மாவட்ட, தொகுதி செயலாளர்களிடம் இருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட கருத்துகளுக்கு தலைவர் 15 தினங்களுக்குள் பதில் தருவதாக உறுதி அளித்ததால் தலைவர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.*

6. *மாதம் 2 முறை மாவட்ட கூட்டம் நடத்தி கூட்ட தீர்மானங்களையும், விவாதிக்கப்பட்ட கருத்துகளையும், புகைப்படங்களையும் மாநில தலைமைக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு இக்கூட்டம் வலியுறுத்துகிறது.*

7. *பெருந்தலைவர் பிறந்தநாளையும், தலைவர் அவர்களின் பிறந்தநாளையும் முன்னிட்டு வருகிற ஜூலை 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டம் நடத்துதல், ஏழை எளியோர்க்கு உதவுதல் போன்ற சேவைகளை செய்து பெருந்தலைவர் மற்றும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.*

8. *மறைந்த குத்துச்சண்டை வீரர் முகமது அலி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்தனை செய்யப்பட்டது.*

**நன்றி , வணக்கம்**
**உழைப்பவரே உயர்ந்தவர்**
**என்றும் அன்புடன்**



**ஆர் சரத்குமார் B Sc.**
**நிறுவனர் - தலைவர்**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி**